செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

அகராதியியல் புலம்

நடத்தும்

# வட்டார வழக்குகளில் செவ்வியல் கூறுகள்

## பயிலரங்கம் – 14

(15.02.2023 – 21.02.2023)

## அறிவிப்பும் அழைப்பும்

மொழி, பேசுகின்ற ஒவ்வொருவரின் தனித்தன்மைக்கு ஏற்பவும் இடம், காலம், சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் சிற்சில வேறுபாடுகளுடன் காலந்தோறும் மாறும் இயல்புடையது. இந்த இயல்புகளைக் கொண்ட தமிழ் மொழியானது பல்வேறு மொழிகளுக்குத் தாய்மொழி, மூத்த மொழி, இலக்கண, இலக்கிய வளமிக்க மொழி என்ற பெருமைகளைக் கொண்டு கன்னித் தமிழ், இளமைகுன்றாத் தமிழ் என்னும் சிறப்புகளையும் தாங்கி வழங்கிவருகின்றது.

இடப்பெயர்வு, புவியியல் அமைப்பு உள்ளிட்ட காரணங்களால் பல்வேறு பகுதிகளாக மக்கள் வாழ்ந்து வரும் சூழலில் அம்மக்கள் பேசும் சொற்களிலும் பழக்க வழக்கங்களிலும் அவ்வப்போது மாற்றங்கள் சில காலந்தோறும் ஏற்பட்டு வந்துள்ளதை அறியமுடிகின்றன. ஒரு மொழியைப் பேசக்கூடிய மக்களின் பேச்சு வழக்கில் மாறுபட்டுக் காணப்படும் முறையை வட்டார வழக்கு என அழைக்கப்படுகிறது. தமிழ் மொழியும் பல வட்டார வழக்குகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு மொழியாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் பல வட்டாரங்களில் பேசப்படும் சொற்களில் வேறுபாடுகள் பல இருந்து வருகின்றன. கடந்த காலங்களில் மக்களிடையே போக்குவரத்துக் குறைவாக இருந்த காரணத்தால் வட்டார வழக்குச் சொற்களில் வேறுபாடுகள் மிகுதியாக இருந்தன. தற்போது போக்குவரத்துப் பெருக்கம், கல்விப் பரவலாக்கம், ஊடகப் பெருக்கம் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட காரணங்களால் ஒரு பொது எழுத்து வடிவம் நிலைபெறுவதால் வட்டார வழக்குச் சொற்களில் வேறுபாடுகள் குறைந்து வருகின்றன. என்றபோதிலும் தமிழகத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் பேசப்படும் மொழிகளில் வட்டாரத்தன்மை இன்னும் நீடித்து நிலைத்திருப்பதைக் காணமுடியும். குறிப்பாகக் கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோவை, தஞ்சை, சென்னை

ஆகிய வட்டாரப் பகுதிகளில் பேசப்படும் சொற்களில் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதைக் காணமுடியும்.

ஒவ்வொரு வட்டார மக்களும் பேசும் சொற்களைக் கொண்டு அவர்கள் எந்த வட்டாரத்தைச் சார்ந்தவர் என்று அடையாளப்படுத்த முடியும். தமிழக வட்டார வழக்குகளில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பல சங்கச் சொற்கள் எவ்விதச் சிதைவுமின்றி இன்றும் மக்களின் பேச்சு வழக்கில் வழங்குவதைக் காணமுடிகின்றன.

வட்டார மொழிகள் கடந்த காலத்தின் சொற்களையும் சொல்லுறுப்புகளையும், நிகழ்காலத்தின் உயிர்த் தத்துவம் நிரம்பிய பகுதியாகப் பாதுகாத்து வைத்துள்ளன. வட்டார வழக்குச் சொற்களின் வளர்ச்சியில் காணப்படும் பல்வேறு கூறுகளைச் சமூக வரலாற்று நோக்கில் ஆராய்ந்து அறிவது மிகவும் தேவையாகும். அந்தவகையில் தமிழக வட்டார வழக்குச் சொற்களில் செவ்வியல் தன்மைகள் நிலைத்திருப்பதை ஆய்வு நோக்கில் வெளிப்படுத்தும் வகையில் இப்பயிலரங்கம் நடைபெறவுள்ளது.

இப்பயிலரங்கில் தமிழ், ஆங்கிலம் மற்றும் மொழியியல் ஆகிய துறைகளில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவ/ மாணவியர்கள் கலந்துகொண்டு பயன்பெற அழைக்கப்படுகிறார்கள்.

இப்பயிலரங்கில் இருமொழிப் புலமை பெற்ற பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். பயிலரங்கின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை - 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 15.02.2023 முதல் 21.02.2023 வரை (தொடர்ந்து 7 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன்கீழ் தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshoplexi@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக தொடர்புகொள்ள வேண்டும்.

8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
12. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: **02.02.2023** இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **03.02.2023** அன்று மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

## வட்டார வழக்குகளில் செவ்வியல் கூறுகள்

### பயிலரங்கம் - 14

### (15.02.2023 – 21.02.2023)

### விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்<br>Name</td><td colspan="5">தமிழ்/ Tamil</td><td colspan="2" rowspan="3">நிழற்படம்<br>[Photo]</td></tr>
<tr><td colspan="5">ஆங்கிலம்/ English</td></tr>
<tr><td>2.</td><td>பிறந்த நாள் / வயது|<br>Age / Date of Birth</td><td colspan="5"></td></tr>
<tr><td>3.</td><td>பாலினம் | Gender</td><td colspan="5"></td><td colspan="2"></td></tr>
<tr><td>4.</td><td colspan="2">வகுப்பு | Class</td><td>பொது/<br>General</td><td></td><td>இ.பி.வ.|<br>OBC</td><td></td><td>பட்டியல்<br>இனம் |<br>SC/ ST</td><td></td></tr>
<tr><td>5.</td><td colspan="2">கல்வித் தகுதி | Educational Qualification</td><td colspan="6"></td></tr>
<tr><td>6.</td><td colspan="2">ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு | M. Phil / Ph.D., Date of Joining/year</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td colspan="2">ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் ஆய்வுத் தலைப்பு | M. Phil / Ph.D. Research Topic</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td colspan="2">பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைப்பேசி/ மின்னஞ்சல் | University / College / Address (Mobile / Email)</td><td colspan="6"></td></tr>
<tr><td>9.</td><td colspan="2">இல்ல முகவரி & கைப்பேசி) |Residential address & Mobile No)</td><td colspan="6"></td></tr>
</table>

<table>
<tr><td>10</td><td>புலன எண் | WhatsApp number</td><td></td></tr>
<tr><td rowspan="2">11</td><td rowspan="2">செம்மொழி நிறுவனம் இக் கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details</td><td>ஆம் | Yes<br>இல்லை| No</td></tr>
<tr><td></td></tr>
</table>

(கையொப்பம்)

நெறியாளர் /துறைத் தலைவர்/
முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்

இடம்:

நாள்: